# <u>தூத்துக்குடி நகரமன்றம்</u>
# <u>அவசரக் கூட்டப்பொருள்</u>

2007ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2( 2) ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## <u>பொருள்கள்</u>

1. இந்நகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவில், நகராட்சிப் பகுதிகளில் மலேரியா கொசுக்களை அழிக்க, மலேரியா கொசு மருந்து கைதெளிப்பான் மற்றும் புகை மருந்து தெளிப்பான் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் தற்போது 9 கைத்தெளிப்பானும், புகை மருந்து தெளிப்பான் ஒன்று மட்டுமே நல்ல நிலையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நகராட்சிப் பகுதி முழுவதிலும் தற்போதுள்ள தெளிப்பான்களை கொண்ட கொசு அழிப்பு மருந்து தெளிப்பது மிகவும் கடினமாக உள்ளது. எனவே புகை மருந்து தெளிப்பான் மோட்டார் இணைப்பு–5 எண்ணிக்கையும் கை தெளிப்பான் 15 எண்ணிக்கையும் வாஙகவும், தெளிப்பான்களை வாஙக ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை எடுக்கவும், தெளிப்பான்கள் வாஙக மற்றும் விளம்பரச் செலவு உட்பட மொத்தம் ரூ 4. 00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு தற்போது மழைக்காலம் வர இருப்பதாலும், சிக்கன் குன்யா, மலேரியா டெஙகு போன்ற கொசுக்கள் அழிக்க வேண்டியது மிகவும் அத்தியாவசியமாக இருப்பதாலும் மேற்படி செலவினத்திற்கு அனுமதி வழஙகலாம்.

எச்1. 16212/2007

**<u>தீர்மானம் எண் : 546</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதி வழஙகப்பட்டது

2. இந்நகராட்சிக்கு சொந்தமான பாளையஙகோட்டை ரோடு கழிவுநீர் நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 15 கு.வேக திறன் பம்பு, 2 கு.வேக திறன் பம்ப் மற்றும் சானல் பிளேட் புதியது மாற்றும் பணி அவசர அவசியம் கருதி செக்ஷன் 15–இன் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செலவுத்தொகை ரூ 16,900/– மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்.

இ3 .14376/07

**<u>தீர்மானம் எண் : 547</u>**

அலுவலகக் குறிப்பு படி பதிவு செய்யப்பட்டது

3. வார்டு எண் 12–க்கு சொந்தமான பூபாலராயர்புரம் பகுதிக்கு தற்போது சுப்பையா பூஙகா மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்தப் பகுதி ( Tail end ) கடைசியான பகுதியாக இருப்பதால் குடிநீர் விநியோகம் சீரான முறையில் கிடைக்கவில்லை. எனவே மேற்கண்ட பகுதியினை அதன் அருகிலுள்ள குரூஸ்புரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்தால் நீரழுத்தம் அதிகமாகி குடிநீர் விநியோகம் சீரான முறையில் நடைபெறும். எனவே மேற்கண்ட குடிநீர் குழாய் பதிக்கத் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 6,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் 109/2007–08

**<u>தீர்மானம் எண்: 548</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

4. இந்நகராட்சி பகுதியில் உள்ள நீதிமன்ற வளாக நுழைவு வாயில் முன்பு ஆவின் பாலக நிர்வாக இயக்குநர் அவர்கள் பெயரில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று 8' x 8' என்ற அளவில் இட ஒதுக்கீடு செய்து இந்நகர்மன்ற தீர்மான எண் 564 நாள் 30/12/05ல் ஒப்புதல் வழஙகப்பட்டுள்ளது.

அதன் பேரில் மேற்படி இடத்தில் பால்பூத் வைக்க அனுமதி வழஙகக்கோரி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் ஒப்புதலுக்க் 09/01/2006ல் அனுப்பப்பட்டது.

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ஆர் 3. 2503/03 நாள் 30/1/06ல் மேற்படி நிறுவனத்திற்கு8' x 8' என்ற அளவில் பால்பூத் ஐ வைக்கவும் அதற்கு ரூ 900/– வீதம் மாத வாடகை நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டது.

அதன் பேரில் இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ16/21532/05 நாள் 10/2/06ல் நிர்வாக இயக்குநர் ஆவின் பாலகம் என்ற பெயரில் 8' x 8' என்ற அளவில் வார்டு 2, பிளாக் 22 நகரளவு எண் 2881/1 பார்ட் 8' x 8' என்ற அளவில் பால் பூத் வைக்க இட ஒதுக்கீடு செய்து உத்திரவு வழஙகப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தனது 27–6–06ம் தேதிய கடிதத்தில் மேற்படி இடம் போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது என தெரிவித்ததன் பேரில் இந்நகராட்சியின் மூலம் கடந்த 30/8/06ல் பால்பூத் அவ்விடத்தைவிட்டு அகற்றப்பட்டது.

மேற்படி இடத்திலிருந்து அகற்றப்பட்டது குறித்து ஆவின் பாலக ஏஜென்ட் உரிமம் பெற்ற திருமதி என். ராஜம்மாள் 114 மீனாட்சிபுரம் 2ம் தெரு, தூத்துக்குடி என்பவர் சென்னை உயர் நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்து வழக்கு எண் W.P. 7563/06ல் தொடர்ந்த வழக்கில் மேற்படி வாதிக்கு சட்டபடியான வாய்ப்பு கொடுத்து அகற்ற உத்திரவிடப்பட்டது.

மேற்படி இடம் போக்கு வரத்துக்கு இடையூராக இருப்பதால் மாற்று இடம் கோரி ஆவின் பாலக ஏஜென்ட் உரிமம் பெற்ற திருமதி என். ராஜம்மாள் என்பவர் அமெரிக்கன் மருத்துவமனை ரோடு சந்திப்பு முன்பு 8' x 8' என்ற அளவு உள் ஆவின் பாலகம் வைக்க இட ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்க கோரியுள்ளார். மேற்படி இடத்தினை வருவாய் ஆய்வர், நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகரமைப்பு அலுவலர் நேரில் சென்று ஆய்வு செய்து தமது அறிக்கையில் மேற்படி இடத்தில் இந்திய கம்னியூஸ்ட் மார்க்ஸிஸ்ட் கொடி கம்பம் உள்ளது என்றும் அந்த இடம் பொது மக்களுக்கு இடையூறு இல்லாத இடமென்று எனவே மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத இடம் என்பதால் நிர்வாக இயக்குனர் ஆவின் பாலகம் பெயரில் ஏற்கனவே வழங்கப்பட்ட 8' x 8' என்ற அளவில் கந்தசாமிபரம் கிழக்கு பக்கம் உள்ள கொடி கம்பம் பக்கத்தில் இருந்து 10அடி தூரம் தள்ளி ஆவின் பாலகம் வைத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்க பரிந்துரை செய்துள்ளார்.

அதன்பேரில் ஆவின் பாலக நிர்வாக இயக்குனர் பெயரில் ஏற்கனவே வழங்கப்பட்ட இவ்வலுவலக செயல்முறை எண் அ16/21532/05 நாள் 10/2/06ல் வழங்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தற்போது மாற்று இடம் கோரியுள்ள கந்தசாமிபுரம் கிழக்கு பக்கம் உள்ள கொடி கம்பம் பக்கத்தில் இருந்து 10அடி தூரம் தள்ளி ஆவின் பாலகம் வைக்க இட ஒதுக்கீடு செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் முடிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்: 549</u>**

நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு ஆவின் பாலகம் வைக்க இட ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது

5. திரு ஆர். தில்லை விநாயகம் முன்னால் ஒப்பந்ததாரர் பல்வேறு பணிக்கான முன்வைப்புத்தொகை செலுத்தியுள்ளார். அன்னார் செலுத்திய முன்வைப்புத் தொகை ரூபாய் 3,250/– காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகை ரூபாய் 3,250/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் பி3. 7791/07

**<u>தீர்மானம் எண்: 550</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

6. திரு ஆர். தஙகராஜ், ஒப்பந்தக்காரர் பல்வேறு பணிகளுக்காக முன் வைப்புத்தொகையாக ரூ 17,800/– செலுத்தியுள்ளார். எனவே அத்தொகை காலஙகடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. மேற்படி முன் வைப்புத்தொகை ரூபாய் 17,800/–ஐ வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண்பி3. 12441/07

**<u>தீர்மானம் எண்: 551</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

7. இந்நகராட்சிக்கு சொந்தமான பவர் டில்லர் வாகனம் டிஎன்.69. 9114ன் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுது நீக்கங்கள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மீண்டும் தகுதிச் சான்று புதுப்பித்து இயக்க வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 387 நாள் 31–07–2007ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 07–09–2007ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வை.கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஷ்ஜ் கால்டுவெல் காலனி, தூத்துக்குடி — ரூ 16,980/–
2. மெசர்ஸ். ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர், தூத்துக்குடி — ரூ 16,200/–
3. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அன்ட் இஞ்சினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை, தூத்துக்குடி — ரூ 17,560/–

**அலுவலகக் குறிப்பு** வரப்பெற்றுள்ள மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் இ1. 15790/2007

**தீர்மானம் எண் : 552**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

8. தூத்துக்குடி நகராட்சி வி.இ. ரோடும், ரைஸ்மில் தெருவும் சந்திக்கும் இடத்தில் நகரளவு எண் 1340/2பி1 இடத்தில் நகராட்சி அனுமதியின்றி கட்டிடம் கட்டியத்திற்கு குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் (1) திரு சந்தானபிச்சை பர்னாந்து (2) திரு ஜாண்சன் (3) திரு ஜெக்சன் (4) ஜோனிசன் ஆகிய இரண்டு நபர்கள் மீது STC 1604/03 என்ற எண்ணில் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கினை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் நான்கு பேரும் மேற்படி வழக்கினை எதிர் வாதிட்டனர். தற்போது மேற்படி வழக்கு விசாரணைக்கு வருவதால் நகராட்சி சார்பாக வழக்கினை ஏற்று நடத்தவும் அதற்காகும் செலவினஙகளுக்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** வழக்கின் செலவுத் தொகையை மன்றம் அனுமதிக்கலாம்.

ஜி5. 10375/97

**தீர்மானம் எண் : 553**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

9. இந்நகராட்சிப் பகுதிகளில் ஏழை குடும்பங்களுக்கு கழிப்பிடம் கட்டுவதற்கு அரசு மானியமாக ரூ 1000/– வழஙக தமிழக அரசு திட்டம் வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின் கீழ் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து 100 பயனாளிகளின் பட்டியல் பெறும் பொருட்டு சுற்றறிக்கை செய்யப்பட்டது. நகர்மன்ற உறுப்பினர்கள் திருமதி அன்னம் தாமஸ் மற்றும் திருமதி எடிண்டா ஆகியோர் முறையே பத்து மற்றும் ஆறு பயனாளிகளின் பட்டியலை கீழ்க்கண்ட விபரப்படி வழஙகியுள்ளார்கள்.

1. சரோஜினி , 247, வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு
2. க. செல்வம், 36, வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு
3. அந்தோணியம்மாள், 46 நம்பிக்கை ரோச் விளை
4. ஞானாதிக்கம், வடக்கு வாணியன்விளை
5. மாணிக்கம், 34, வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு
6. மாணிக்கம், வியாகுல மாதா கோவில் 31, நம்பிக்கை ரோச் விளை
7. மூக்காண்டி , 62 வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு
8. முத்து வடிவேல், 17, வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு
9. பாலையா, 87, வடக்கு வாணியன்விளை
10. பூமணியம்மாள் 8, வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு
11. மலர்சீலி, 49 புனித ஜார்ஜ் தெரு
12. ரோனிமுஸ் பிச்சையா 46, புனித ஜார்ஜ் தெரு
13. செலின், 25 புனித ஜார்ஜ் தெரு
14. மேரி, 41 புனித ஜார்ஜ் தெரு
15. ராணி மோட்சம் 2, புனித ஜார்ஜ் தெரு
16. லூசியா, 30 , புனித ஜார்ஜ் தெரு

மேற்கண்ட பயனாளிகள் தஙகள் சொந்த பொறுப்பில் கழிப்பிடம் கட்டிக் கொள்ளவும் அதற்கான நகராட்சி அனுமதி வழஙகவும், கழிப்பிடம் கட்டி முடித்து அறிக்கை பெறப்பட்ட பின்னர் பொறியர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு சான்று பெறப்பட்ட பின்னர் மானியத் தொகை ரூ 1000/– ஒவ்வொருவருக்கும் பெற்று வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** 1. அனுமதிக்கலாம்

2. தூத்துக்குடி நகராட்சி சார்பில் 100 பயனாளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும். எனவே மற்ற உறுப்பினர்களை பயனாளிகளை தேர்வு செய்து பட்டியல் வழஙகவும் கேட்டுக்கொள்ளலாம்.

எச்1. 11695/2007

**<u>தீர்மானம் எண் : 554</u>**

அலுவலகக் குறிப்பு 1, மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது

10. இந்நகராட்சிக்குட்பட்ட வி.இ. ரோடு கதவு எண் 379ல் கட்டப்பட்டு வரும் டி.எஸ்.எப். கிராண்ட் பிளாசாஸ் வளாகத்திற்கு தினமும் 60,000 லிட்டர் குடிநீர் தேவைப்படவதாக தெரிவித்து மேற்படி குடிநீர் இஇணப்பினை நீரேற்று குழாய் வரிசையிலிருந்தோ அல்லது பகிர்மானக் .குழாயிலிருந்தோ வழஙகுமாறு மேற்படி நிறுவனத்தினர் கோரியுள்ளார்கள்.

தூத்துக்குடி நகராட்சியின் ஒப்புதலளிக்கப்பட்ட குடிநீர் உபவிதிகளில் bulk supply வழங்குவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்படவில்லை.

மேலும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பில் அனைத்து நகராட்சிகளுக்கும் அடுத்த 30 ஆண்டுகளில் தேவைக்கேற்றவாறு குடிநீர் அபிவிருத்தி திட்டஙகள் செயல்படுத்தப்படுவதால் விண்ணப்பிக்கும் அனைவருக்கும் குடிநீர் இணைப்பு வழஙக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அறிவித்துள்ள நிலையிலும், இந்நகராட்சியில் உள்ள ஏறத்தாழ 75000 வீட்டு வரிவிதிப்புகளில் இது வரை 32000 வரிவிதிப்புகளுக்கு மட்டுமே குடிநீர் இணைப்புகள் வழஙகப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான bulk supply கேட்டு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் கோரிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று பரிசீலிக்கவும்

**அலுவலகக் குறிப்பு**

1. bulk supply வழஙகுவதற்கு குடிநீர் விநியோகத்தில் பாதிப்பு ஏதும் ஏற்படாது. எனவே சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். இ3. 5584/07

**தீர்மானம் எண் : 555**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

11. இந்நகராட்சிக்கு சொந்தமான பூபாலராயர்புரம் 5வது தெரு மற்றும் குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 3,75,000/—ஐ மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்.

மபஎண்.

**தீர்மானம் எண் : 556**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

12) இந்நகர் நாடார் தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு பொது நிதியிலிருந்து செய்ய 12—9—07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு ஜி.பார்த்திபன் | மதிப்பீட்டுற்கு ரூ. 0. 69 அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எம்.தாமஸ் | மதிப்பீட்டுற்கு ரூ 0.46% குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 329 தேதி 29–5–07ல் ரூ. 1,80,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.46% குறைவானதுமான திரு எம்.தாமஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.37/07–08

<u>தீர்மானம் எண்: 557</u>

அலுவலகக் குறிப்பு 1, மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

13) இந்நகராட்சிப் பகுதி மில்லர்புரம் நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் கட்டும் பணி பொது நிதியிலிருந்து செய்ய 7–9–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு ஜே. விஜயன் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 12 குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு சி. ரவி | மதிப்பீட்டிற்கு ரூ 0.06% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 376 தேதி 22–6–07ல் ரூ. 3,80,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 12% குறைவானதுமான திரு ஜே. விஜயன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.47/07–08

<u>தீர்மானம் எண்: 558</u>

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

14) இந்நகராட்சிப் பகுதி அழகேசபுரம் பொன்னகரம் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு பொது நிதியிலிருந்து செய்ய 31–8–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எம். தாமஸ் | மதிப்பீட்டிற்கு ரூ. 0. 44 குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

| | | |
|---|---|---|
| 2) திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டுற்கு ரூ 0.65% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 267 தேதி 27–4–07ல் ரூ. 80,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 44% குறைவானதுமான திரு எம். தாமஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 5/07–08

**<u>தீர்மானம் எண் : 559</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

15) இந்நகராட்சிப் பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் ஏற்படும் நீர் கசிவுகளை சரி செய்ய மண்தோண்டும் பணி பொது நிதியிலிருந்து(குடிநீர் விநியோகம்) செய்ய 31–8–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டுற்கு ரூ. 0. 11 குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு எம். தாமஸ் | மதிப்பீட்டுற்கு ரூ 2.74% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 411 தேதி 31–7–07ல் ரூ. 1,20,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 11% குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.56/07–08

**<u>தீர்மானம் எண் : 560</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**16)** இந்நகராட்சிப் பகுதி அழகேசபுரம் சாலையில் மழைநீர் வடிகால் உயர்த்திக் கட்டும் பணி பொது நிதியிலிருந்து செய்ய **31–8–07** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எம். தாமஸ் | மதிப்பீட்டுற்கு ரூ. 0. 35 குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டுற்கு ரூ 0.56% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 268 தேதி 27–4–07ல் ரூ. 80,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 35% குறைவானதுமான திரு எம். தாமஸ் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.4/07–08

**<u>தீர்மானம் எண் : 561</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

17 ) இந்நகராட்சிப் பகுதி தாமோதர நகரில் உள்ள குறுக்கு சாலையில் தார்தளம் அமைக்கும் பணிக்கு பொது நிதியிலிருந்து செய்ய 14–9–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு கே.வி. மாரியப்பன் | மதிப்பீட்டுற்கு ரூ. 0. 27 குறைவு | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு கே. சதா | மதிப்பீட்டுற்கு ரூ 3 44% அதிகம் | டேவணித் தொகை செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 323 தேதி 29–5–07ல் ரூ. 1,80,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 27% குறைவானதுமான திரு கே.வி. மாரியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.17/07–08

**<u>தீர்மானம் எண் : 562</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**18)** இந்நகராட்சிப் பழைய பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழிப்பறை பழுதுபார்க்கும் பணிக்கு பொது நிதியிலிருந்து செய்ய 31–8–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திருமதி பி. கோமதி | மதிப்பீட்டுற்கு<br>ரூ. 0. 48 குறைவு | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |
| 2) திரு பி. கண்ணன் | மதிப்பீட்டுற்கு<br>ரூ 1. 97% அதிகம் | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 469 தேதி 29–8–07ல் ரூ. 50,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 48% குறைவானதுமான திருமதி. பி. கோமதி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 108/07–08

**<u>தீர்மானம் எண் : 563</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

19. இந்நகராட்சிப் பகுதி சுப்பா தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பொது நிதியிலிருந்து செய்ய 12–9–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு எம். தாமஸ் | மதிப்பீட்டுற்கு<br>ரூ. 0. 38 குறைவு | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |
| 2) திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டுற்கு<br>ரூ 0. 41% அதிகம் | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 321 தேதி 29–5–07ல் ரூ. 1,25,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 38% குறைவானதுமான திரு எம். தாமஸ்

என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண். 16/07–08

**தீர்மானம் எண்: 564**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**20)** இந்நகராட்சிப் பராமரிப்பில் உள்ள சத்திரம் தெருவில் அமைந்துள்ள திருமண மண்டபத்தில் சாப்பாட்டு அறையில் டேபிள் மற்றும் சேர் வசதி செய்யவும் மற்றும் சமையல் அறையில் தளவாட சாமான்கள் மற்றும் ஸ்டவ் வசதி செய்யும் பணிக்கு 14–9–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு கே, வேலாயுதம் | மதிப்பீட்டுற்கு<br>ரூ. 0. 07 குறைவு | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |
| 2) திரு வி. தஙகராஜ் | மதிப்பீட்டுற்கு<br>ரூ 0.02% குறைவு | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 489 தேதி 29–8–07ல் ரூ. 3,60,000/– மற்றும் 465 நாள் 31–7–97ல் ரூ 6,00,000/– க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2 வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 07% குறைவானதுமான திரு கே. வேலாயுதம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.106/07–08

**தீர்மானம் எண்: 565**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**21)** இந்நகராட்சிப் பகுதி சுப்பையா பூஙகாவிலுள்ள நீர்த்தேக்கத்தொட்டி பகுதி சுற்றுச்சுவர் கட்டும் பணி பொது நிதியிலிருந்து செய்ய 12–9–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு கே. பழனியப்பன் | மதிப்பீட்டுற்கு<br>ரூ. 0. 33% அதிகம் | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |
| 2) திரு ஜே. சுரேஷ் ஜெயக்குமார் | மதிப்பீட்டுற்கு<br>ரூ 0.07% குறைவு | டேவணித் தொகை<br>செலுத்தியுள்ளார் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 375 தேதி 22–6–07ல் ரூ. 3,80,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 07% குறைவானதுமான திரு ஜே. சுரேஷ் ஜெயக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

ம.ப.எண்.50/07–08

**<u>தீர்மானம் எண் : 566</u>**

அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

22. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 2007ம் வருடத்திற்கு தேவையான கிருமி நாசினிகள் வாஙக நகர்மன்ற தீர்மானம் எண் 206 நாள் 27–4–2007ல் அனுமதி வழஙகப்பட்டதை தொடர்ந்து 14–6–2007ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இரண்டு நிறுவனஙகள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி வழஙகியுள்ளனர்.

| வஎண் | தளவாடச் சாமான்கள் விபரம் | மெசர்ஸ் எம்.எஸ். எண்டர்பிரைசர்ஸ், 257 பெரியத்தெரு, திருநெல்வேலி | மெசர்ஸ் கே. கனகசபாபதி முதலியார் சன்ஸ் 359 சுவாமி சன்னதி தெரு, தென்காசி |
|---|---|---|---|
| 1 | சுண்ணாம்புத்தூள் | ரூ 3. 70 கிலோ | ரூ 4. 00 கிலோ |
| 2 | கருப்பு பினாயில் | ரூ 790 /–( 25 லிட்டர் கேன்) | ரூ 810/– (25 லிட்டர் கேன்) |
| 3 | பிளிச்சிங பவுடர் | ரூ 24. 50 கிலோ | ரூ 23. 40 கிலோ |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்

**<u>குறிப்பு</u>**

மெசர்ஸ் எம்எஸ். எண்டர்பிரைசர்ஸ், திருநெல்வேலி நிறுவனம் கீழ்க்கண்ட விபரப்படி கிருமிநாசினிகளுக்கு குறைந்த விலையை கொடுத்துள்ளனர்.

1. சுண்ணாம்புத்தூள் கிலோ ஒன்றுக்கு ரூ 3. 70
2. கருப்பு பினாயில் 25 லிட்டர் கேன் ஒன்றுக்கு ரூ 790/–

மெசர்ஸ் கே கனகசபாபதி முதலியார் சன்ஸ், தென்காசி நிறுவனம் கீழ்க்கண்ட தளவாடச் சாமான்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளனர்.

1. பிளிச்சிங பவுடர் கிலோ ஒன்றுக்கு ரூ 23. 40

மேற்கண்ட விலைகள் வெளிச் சந்தை விலைக்கு சமமாக உள்ளதா என அறிக்கை பெற்றதில் வரிசை எண் 1 மற்றும் 2இல் கண்டுள்ள விலைப்புள்ளி மார்கெட் விலைப்புள்ளியை ஒத்துள்ளது என்றும் சுண்ணாம்புத்தூள் கிலோ ஒன்றுக்கு ரூ 3. 70 என்பது வெளிச் சந்தை விலை அதிகமாக உள்ளதாக தெரிவித்ததை தொடர்ந்து ஒப்பந்ததாரர்களிடம் வெளிச்சந்தை

விலைக்கான கீழ்க்கண்ட விலைக்கு ஒப்புதல் தர இயலுமா என்று தெரிவிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வெளிச் சந்தை விலைக்கு சுண்ணாம்புத்தூள் தர சம்மதம் தெரிவித்து கடிதம் வழஙகியுள்ளார்.

1. சுண்ணாம்புத்தூள் கிலோ ஒன்றுக்கு ரூ 2. 40
(மெசர்ஸ் எம்.எஸ். எண்டர்பிரைசர்ஸ்,
திருநெல்வேலி)

எனவே மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளிகள் வெளிச் சந்தை விலைக்கு சமமாக இருப்பதால் குறைந்த விலைப்புள்ளிகள் கொடுத்ததை அஙகீகரிக்கலாம்.

எச்1. 4693/2007

**<u>தீர்மானம் எண் : 567</u>**

அலுவலகக் குறிப்புபடி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் அஙகீகரிக்கப்பட்டது

**23.** இந்நகர் 20வது வார்டு தெற்கு எம்பரர் தெருப் பகுதியிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் உள்ள குடிநீர் இணைப்புகளில் சீராக குடிநீர் கிடைக்காததால் குடிநீர் சீராக கிடைக்க புதிய நீர் அழுத்தக்குழாய் பதிப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 48,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 125/07–08

**<u>தீர்மானம் எண் : 568</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**24.** இந்நகர் வார்டு எண் 42ல் உள்ள அண்ணாநகர் 2ம் தெரு தொடர்ச்சியில் கழிவுநீர் தேஙகி சுகாதார கேடு உள்ளதாலும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடையூராகவும் இருக்கிறது. எனவே அஙகு வடிகால் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பிடு ரூ 1,70,000/– (ரூபாய் ஒரு லட்சத்து எழுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 111/07–08

**<u>தீர்மானம் எண் : 569</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**25.** இந்நகராட்சிக்கு சொந்தமான வடக்கு கடற்கரைசாலை அண்ணா காலனி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 127/07–08

**<u>தீர்மானம் எண் : 570</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

26. தூத்துக்குடி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் தற்சமயம் 500 KVA டிரான்ஸ்பார்மர் உள்ளது. தற்சமயம் நகராட்சியில் புதியதாக ( 3 + 2) 5 எண்ணம் கிணறுகள் போடப்பட்டுள்ளது. மேலும் 175 குதிரை வேகமுள்ள மின் மோட்டார் இயக்க வேண்டியுள்ளது. ஏனெனில் நகரில் தற்சமயம் குடிநீர் விநியோகம் MLD செய்வதற்கு 175 குதிரை வேகமுள்ள பம்புசெட் இயக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பம்புசெட் இயக்க தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள டிரான்ஸ்பார்மர் கொள்ளளவு போதுமானதாக இல்லை. எனவே தற்சமயம் உள்ள 2 எண்ணம் 500 KVA உள்ள (One stand by) டிரான்ஸ்பார்மர் கொள்ளளவு உள்ளதை 2 எண்ணம் 800 KVA (One stand by) டிரான்ஸ்பார்மர் கொள்ளளவு ஆக மாற்றம் செய்வதற்கும், அதற்குரிய தோராய செலவு ரூ 45,00,000/– மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** குடிநீர் விநியோகம் இருப்பதால் தற்சமயம் குடிநீர்க் குழாய் இணைப்புக்குரிய டேவணித்தொகையிலிருந்து பெறப்படும் தொகையிலிருந்து மேற்கண்ட பணியினை செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெறலாம்.

இ3. 20043/07

**<u>தீர்மானம் எண்: 571</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

27. இந்நகராட்சி பொறியியல் பிரிவு தினக்கூலி பணியாளர்கள் திரு செல்வகுமார் மற்றும் 6 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் நகராட்சி மீது தொடுத்த வழக்கு எண் WA No. 1524/2000 வழக்கின் தீர்ப்பினை மறு பரிசீலனை செய்யக் கோரி நகராட்சி தரப்பில் மறு பரிசீலனை மனு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்து வழக்காடவும், அது வகைக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர செலவித்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

இ2. 15538/99

**<u>தீர்மானம் எண்: 572</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

28. இந்நகராட்சி பழைய பேருந்து நிலையம் , கிரேட் காட்டன் ரோடு மற்றும் வி.இ. ரோடு வணிக வளாக கடைகளுக்கு 1–4–1988 முதல் 31–3–1995 முடிய மூன்று வருடத்திற்கு ஒரு முறை 15% உயர்வு செய்வதற்கு பதிலாக வருடத்திற்கு ஒரு முறை 15% உயர்வு செய்து தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்ற அனுமதி கோரப்பட்டது.

இந்நகர் மன்ற தீர்மான எண் 456 நாள் 31–7–2007ல் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் இது குறித்து நேர்முக அறிவுரை பெற்றதில் தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை நீக்கம் செய்ய மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என தெரிவிக்கப்பட்டது.

எனவே பழைய பேருந்த நிலையம், கிரேட் காட்டன் ரோடு மற்றும் வி.இ. ரோடு வணிக வளாகத்தில் தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பு தொகை ரூ 9,56,052/—ஐ கேட்பில் இருந்து நீக்கம் செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்புத்தொகை ரூ 9,56,052/—ஐ நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 14228/07

**<u>தீர்மானம் எண்: 573</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

29. இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 40ஐ உரிமம் பெற்ற திரு கருப்பசாமி என்பவரின் உரிமம் 30—9—2007ல் முடிவடைந்து விட்டது. அன்னார் 30—9—2007ல் முடிய உள்ள வாடகை நிலுவை ரூ 1,67,796/—ஐ செலுத்தி நகராட்சி வசம் கடையின் உரிமத்தினை ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்.

அதன் பேரில் புதிய பேருந்த நிலைய கடை எண் 40—ன் உரிமத்தை ரத்துச் செய்து மறு ஏலம் விடவும், அது வகைக்கு செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

அ16. 9676/07

**<u>தீர்மானம் எண்: 574</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

30. தூத்துக்குடி நகரை பல வகைகளில் சீரமைக்கும் விதத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்டு நகர சீரமைப்புக்குழு அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் (தலைவர்)
2. நகர்மன்ற தலைவர் — உறுப்பினர்
3. நகர்மன்ற துணைத் தலைவர் — "
4. நகராட்சி ஆணையர் — "
5. முதுநிலை நகரமைப்பு அலுவலர் — "
6. பொறியாளர் — "
7. நகர் நல அலுவலர் — "
8. இதர அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள் — "
9. குழுவால் முடிவு செய்யப்படும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

எப்1. 20021/07

**<u>தீர்மானம் எண் : 575</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

31. தூத்துக்குடி நகர்புறம் பகுதிக்கு 0. 200 மீட்டர் கடல் உயர்மட்ட எல்லைக்குள் உள்ள இயற்கை சீற்றஙகளினால் பாதிப்படைய வாய்ப்புள்ள வீடுகளுக்குப் பதிலாக 852 பயனாளிகளுக்கு மாற்றுக் குடியிருப்புகள் கட்ட வட்டாட்சியர், தூத்துக்குடி அவர்களிடமிருந்து பட்டியல் பெறப்பட்டு மேற்படி பட்டியல் நகராட்சி விளம்பர பலகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

இது தொடர்பாக எந்தவித ஆட்சேபனை மனுக்கள் எதுவும் நகராட்சியில் பெறப்படவில்லை.

எனவே வட்டாட்சியர் , தூத்துக்குடி அவர்களிடம் பெறப்பட்ட பட்டியலில் கண்டுள்ள 852 பயனாளிகளுக்கு மாற்றுக் குடியிருப்பு கட்டிக்கொடுக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

எப்6. 15423/07

**<u>தீர்மானம் எண் : 576</u>**

அலுவலகக் குறிப்புபடி ஒப்புதல் அளிக்கப்பட்டது

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள் 25-9-2007